செ. கு. எண்:73

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 14.3.2013

திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு மின்சார வாரிய ஆவடி பிரிவில் மஸ்தூராக பணி புரிந்து வந்த பூந்தமல்லி வட்டம் கொடுங்கையூரைச் சேர்ந்த திரு. கண்ணன் அவர்கள், 1.3.2013 அன்று ஆவடி முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள மின் மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், தமிழ்நாடு மின்சார வாரிய கிளியனூர் பிரிவில் கள உதவியாளராகப் பணி புரிந்து வந்த திரு. கஜேந்திரன் அவர்கள் 5.3.2013 அன்று கிளியனூர் மின்மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், தமிழ்நாடு மின்சார வாரிய ஆம்பூர் நகர பிரிவில் மஸ்தூராக பணி புரிந்து வந்த திரு. சுகுமார் அவர்கள், 6.3.2013 அன்று நேதாஜி மின்பகிர்மான மின்மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாடு மின்சார வாரிய கள உதவியாளர் கஜேந்திரன், மஸ்தூர் பணியாளர்கள் கண்ணன் மற்றும் சுகுமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், தமிழ்நாடு மின்சார வாரிய கிளியனூர் பிரிவில் கம்பியாளராகப் (Lineman) பணி புரிந்து வந்த

திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் 5.3.2013 அன்று கிளியனூர் மின்மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி காயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி காலமான தமிழ்நாடு மின்சார வாரிய கள பணியாளர் கஜேந்திரன், மஸ்தூர் பணியாளர்கள் கண்ணன் மற்றும் சுகுமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், மின்சாரம் தாக்கியதில் காயமடைந்த கம்பியாளர் திரு. ராமகிருஷ்ணனுக்கு 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**